# அவுஸ்திரேய உயர்ஸ்தானிகராலயம்
# கொழும்பு

**24** நவம்பர் 2014

## <u>பெண்களுக்கு எதிரான வன்செயல்களை முடிவுக்குக் கொண்டுவருவதில் பங்களிப்பு</u>

**ரொபின் மூடி - அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர்**

பெண்கள் மீதான வன்செயல்களை ஒழிக்கும் சர்வதேச தினத்தில், அவுஸ்திரேலியாவிலும், பசுபிக் நாடுகளிலும், இந்து சமுத்திர கரையோர தேசங்கள் உட்பட மற்றும் பல நாடுகளில் தினமும் பெண்களுக்கு எதிராக இடம்பெற்று வரும் மிகப் பயங்கரமான வன்செயல் நடவடிக்கைகள் பற்றி நினைவுகூருவது முக்கியமாகும்.

பெண்களுக்கு எதிரான வன்செயல்கள் மிக மோசமான அதேசமயத்தில் மனித உரிமைகளின் துஷ்பிரயோகம் சம்பந்தமான நடவடிக்கையாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இந்த விடயம் தொடர்பாக, ஒவ்வொரு நாட்டிலும் பெருமளவு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற போதிலும், வன்செயல்கள் சம்பந்தமான புள்ளி விபரங்கள் தொடர்ந்தும் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தும் அதேசமயத்தில், தனிநபர் வாழ்க்கையில் வன்செயல்கள் மற்றும் சமூகத்தினர் மத்தியில் சிறந்த சூழ்நிலை என்பன மீது ஏற்படும் தாக்கம் என்பன பேரழிவைத் தருகின்றன.

உலக நாடுகள் சம்பந்தப்பட்ட மட்டில் மூன்று பெண்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் தாக்கப்பட்டு, வண்புனரப்பட்டு அல்லது வேறு வகைகளில் துஷ்பிரயோகம் செய்யப்படும் நடவடிக்கைகள், அவரது கணவர் உட்பட அவர் அறிந்த ஒருவர் அல்லது குடும்பத்தின் ஆண் அங்கத்தவர் ஆகியோரினால் இடம்பெறுவது துரதிஷ்டவசமாகும். பசிபிக் நாடுகள் சிலவற்றில் ஆய்வுக்குட்பட்ட மூன்று பெண்களில் இருவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவுஸ்திரேலியாவில் ஒவ்வொரு வாரமும் ஒரு பெண் தற்போதைய அல்லது முன்னாள் கணவரினால் கொல்லப்படுகின்றார்.

அவுஸ்திரேலியாவின் பெண்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளுக்கு எதிரான வன்செயல்களைக் குறைப்பதற்குரிய தேசிய மன்றம் தகவல் தருகையில், 2009 ஆம் ஆண்டில் பெண்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளுக்கு எதிரான வன்செயல்கள் சம்பந்தமாக அவுஸ்திரேலிய பொருளாதாரத்தில் 13.6 பில்லியன் அவுஸ்திரேலிய டொலர்கள் செலவிடப்பட்டது என்றும், இந்த விடயம் தொடர்பாக திட்டவட்டமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படா விட்டால் 2021-22 ஆம் ஆண்டில் இந்தத் தொகை 15.6 பில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களாக அதிகரிக்கும் எனவும் தெரிவித்துள்ளது.

வன்செயல்கள் முதலில் பெண்களையும், பின்னர் அவர்களது பிள்ளைகளையும், குடும்பத்தினரையும், சமூகத்தினரையும் பாதிக்கின்றன. இருந்த போதிலும், இது, தேசிய பொருளாதாரத்தில் பாரிய சுமையாக உள்ளதோடு, நிரந்தர சமாதானத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துவதோடு, நிலைபேறான தேசிய அபிவிருத்திக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளன.

பெண்களுக்கும், அவர்களது பிள்ளைகளுக்கும் எதிரான வன்செயல்களைத் தடுப்பதற்கு தேவையான மாற்றத்தை நாம் உருவாக்க முடியும் என்று சர்வதேச ரீதியிலான ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. இதனைப் பூர்த்தி செய்வதற்கு இத்தகைய வன்செயல்களை நியாயப்படுத்தல், மன்னித்தல், எதிர்

நடவடிக்கை மேற்கொள்ளத் தவறுதல் என்பன சம்பந்தமாக நாம் ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகும்.

பெண்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் எதிரான வன்செயல்களின் எண்ணிக்கையை முக்கியமாகவும் நிலைபேறாகவும் குறைப்பதற்கென அவுஸ்திரேலியா அதன் '*இரண்டாவது நடவடிக்கைத் திட்டம் முன்னோக்கிச் செல்லல் 2013-16*' என்பதை சமீபத்தில் ஆரம்பித்தது. இந்தக் காலப்பகுதியில் கலாசார மாற்றம் முன்னெடுக்கப்படும் என்றும், பெண்கள் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை அறிவிப்பதில் ஊக்கமளிக்கப்படுவார்கள் என்றும் அவுஸ்திரேலிய சமூகத்தின் பெரும்பான்மையினர் வன்செயல்களை முற்றாக நிராகரிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பெண்களுக்கு எதிரான வன்செயல்கள், உலக நாடுகளில் வாழும் பெண்களையும், யுவதிகளையும் பாதிக்கும் ஒரு விடயமாகும் என்பதை அங்கீகரித்ததோடு, பெண்களுக்கு எதிரான வன்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஏனைய நாடுகளுக்கு ஆதரவளிப்பதிலும், பங்களிப்புச் செய்வதிலும் அவுஸ்திரேலியா அர்ப்பணித்துச் செயற்படுகின்றது.

இந்த வருட முற்பகுதியில் நான்கு வருடகாலம் நீடிக்கும் 20 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களைக் கொண்ட நடவடிக்கை ஒன்றை அவுஸ்திரேலியா ஆரம்பித்தது. வன்செயல்களைத் தடுப்பதன் மூலமும், அதற்கு ஆதரவளிக்கும் சேவைகளை வழங்குவதன் மூலமும், தினோர்-லெஸ்டெயில் (Timor-Leste) வன்செயல்களுக்கான காரணங்கள் மற்றும் தாக்கங்கள் பற்றி ஆராயும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பிஜியில் 1984 ஆம் ஆண்டில் பிஜி பெண்கள் நெருக்கடிக்குத் தீர்வுகாணும் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இந்த நிலையத்தின் மூலம் 35,000 புதிய மக்களுக்கும் 41,000 மீளப் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கும் ஆலோசனையும் உதவிச் சேவைகளும் வழங்கப்பட்டன.

2013 ஆம் ஆண்டில் இருந்து பாகிஸ்தானிலும், ஆப்கானிஸ்தானிலும், பெண்களுக்கும் யுவதிகளுக்கும் எதிரான வன்செயல்களை முடிவுக்குக் கொண்டுவரவென 30 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களுக்கும் அதிகமான தொகையை நாம் வழங்கியுள்ளோம். இந்த நிதியுதவி மூலம் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டதோடு, ஆண்கள், பெண்கள், சமய மற்றும் சமூகத் தலைவர்கள் ஆகியோருடன் இணைந்த, பெண்களுக்கு எதிரான வன்செயல்களுக்கு ஆதரவளிக்கும் நடவடிக்கைகளுக்கும் மனபான்மைக்கும் சவால் விடுக்கும் வகையில் புதிய அணுகுமுறைகள் காணப்பட்டன.

பிரச்சினைகள், அவசரகாலங்கள், நெருக்கடிகள் ஏற்படும் சமயத்தில் இடம்பெறும் வன்செயல்களுக்கு பெண்கள் முக்கியமாக இலக்காகின்றனர். பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பாலியல் வன்செயல்களைத் தடுக்கும் பிரிட்டனின் முயற்சிகளில் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் முன்னணியிலுள்ளமையே இதற்கான காணரமாகும். ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் பெண்களுக்கான சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலை முன்னிலைப்படுத்துவதில் அவுஸ்திரேலியா திடசங்கற்பம் கொண்டுள்ளமைக்கான காரணமும் இதுவாகும்.

இந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் பெண்கள் மற்றும் யுவதிகளுக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் நட்டாசா ஸ்ரொட் டெஸ்போஜா ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இடம்பெற்ற 'பெண்களுக்கான சமாதானமும் பாதுகாப்பும்' என்ற திறந்த விவாதத்தில் பங்குபற்றியமைக்கான காரணமும் இதுவாகும். பிரச்சினைகள் காரணமாக, இடம்பெயர்ந்த பெண்கள் மற்றும் யவதிகள் முக்கியமாக பாதிக்கப்படும் நிலைமையைச் சுட்டிக்காட்டி, இத்தகைய பாலியல் வன்செயல்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தியிருந்தார்.

பெண்கள் மீதான வன்செயல்களுக்கு எதிராக கருத்து வெளியிடும் பொறுப்பை ஒவ்வொரு பிரஜையும், சமூகமும், அரசாங்கமும் கொண்டுள்ளன. இத்தகைய வன்செயல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று

வேலைத்தலங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், சமூக நிறுவனங்கள், இல்லங்கள் என்பனவற்றில் நாம் அனைவரும் தெரிவிப்பது அவசியமாகும்.

‘வெள்ளைப் பட்டித் தூதுவர்’ என்ற வகையில், அவுஸ்திரேலிய பிரதமமந்திரி உதாரண புருஷராகத் திகழ்கின்றார். அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உயர்மட்ட நிலையிலுள்ள பிரதமமந்திரி அபொட்டும், பெண்களுக்கு எதிரான வன்செயல்களை அவுஸ்திரேலியா ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டாது எனக் கூறியிருப்பது இதற்கு சான்று பகரும்.

உலக நாடுகளில் நிரந்தரமானதும், நியாயமானதுமான மாற்றத்தை பெண்கள் மற்றும் யுவதிகளின் நன்மைக்காக மட்டுமல்ல, நம் அனைவரினதும் நன்மைக்காகக் கொண்டு வருவதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு முயற்சி மேற்கொள்வது அவசியமாகும்.